முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 19-07-2024

# மாநிலப் பட்டியலில் கல்வி

காலை உணவுத் திட்டத்தை அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கும் சேர்க்கும் திட்டத் தொடக்கவிழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய அரசை நோக்கி மிக முக்கியமான கேள்வி ஒன்றை வைத்தார்கள்.

**“ஒன்றிய பா.ஜ.க. அரசு, அரசியலுக்காக இப்போது நெருக்கடி நிலையைப் பற்றி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால் நாம் கேட்கிற கேள்வி, நெருக்கடி நிலைக் காலத்தில் ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி அதிகாரத்தை உடனடியாக மாநிலப் பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாராக இருக்கிறதா? இந்த ஆக்கபூர்வமான செயலை அவர்கள் செய்வார்களா?” என்பது தான் முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய கேள்வி ஆகும். இதற்கு இதுவரை வாயைத் திறக்கவில்லை. திறக்கவும் மாட்டார்கள்.**

கடந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “மக்களுக்கு நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக, கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும். அதைச் செய்தால்தான் ‘நீட்’ போன்ற கொடூரமான தேர்வு முறையை முற்றிலுமாக அகற்ற முடியும்” என்று பேசினார்கள். எனவே, இது தொடர்ந்து எழுப்பப்படும் கோரிக்கையே ஆகும்.

பல்வேறு பிரிவினர் வாழும் நாட்டில் கல்வியானது மாநிலங்களின் தன்மைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாநிலப் பட்டியலில் கல்வியை வைத்தார்கள் அரசியலமைப்புச் சட்ட மேதைகள். 1976 ஆம் ஆண்டில் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்ட நேரத்தில், இந்திராகாந்தி தலைமையில் இருந்த ஒன்றிய அரசாங்கம், மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி, வனம், வன உயிரினங்கள், பறவைகள் பாதுகாப்பு, நீதி பரிபாலனம், எடைகள் மற்றும் அளவுகள் ஆகிய துறைகளை அரசியல் சட்டத்தில் உள்ள 7-வது அட்டவணையில் இருக்கும் பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. இதன் மூலம் கல்வி; ஒன்றிய - மாநில அரசுகள் கைகளுக்குப் போனது. சர்தார் ஸ்வரன் சிங் அளித்த அறிக்கைப்படி இதனைச் செய்தார்கள்.

பொதுப்பட்டியல் என்று சொல்லப்பட்டாலும் முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டது போன்ற தோற்றமே இருக்கிறது. புதிய கல்விக் கொள்கையானது அதைத்தான் இப்போது செய்து கொண்டு இருக்கிறது. தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**பொதுப்பட்டியலில் இருக்கும் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார் ஆயிரம் விளக்கு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன். ‘அறம் செய்ய விரும்பு’ தொண்டு நிறுவனம் மூலம் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார். விசாரணைகள் முடிவுற்று மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அந்த வழக்கு மாற்றப்பட்டுள்ளது. ‘கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்’ என்று தனிநபர் மசோதா கொண்டு வந்திருந்தார், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் வில்சன்.**

மருத்துவர் எழிலன் தாக்கல் செய்த வழக்கின் விசாரணையின் போது, ‘கல்விக்கு அதிகமாகச் செலவு செய்வது மாநில அரசுகளே’ என்ற வாதங்கள் வலுவாக வைக்கப்பட்டன. எழிலன் சார்பில் வாதங்களை வைத்த மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, “நெருக்கடிநிலைக் காலத்தில் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டத் திருத்தமானது, மாநிலங்களின் சுயாட்சி அதிகாரத்தைப் பறிப்பது ஆகும். இது கூட்டாட்சிக் கொள்கையைப் பாதிக்கிறது. இப்படி கல்வியை மாற்றியபோது தமிழ்நாடு அரசு அதில் கையெழுத்திடவில்லை. மக்களவையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை” என்று வாதிட்டுள்ளார்.

மாநிலப் பட்டியலில் இருந்து எந்த அதிகாரத்தையும் எந்த நேரத்திலும் மாற்றும் அதிகாரமும் ஒன்றிய அரசிடமே இருக்கிறது. இப்படி இருந்தால், அவர்கள் அதனைத் தவறாகத் தானே பயன்படுத்துவார்கள்? பயன்படுத்திக் கொள்வார்கள்?

இந்தியாவின் அரசியலமைப்பு என்பது கூட்டாட்சித் தன்மை கொண்டது ஆகும். ஒற்றை ஒன்றிய அரசு மட்டுமே அரசல்ல, ஏராளமான மாநில அரசுகள் உள்ளன. மாநில அரசுகளின் அதிகாரங்களில், ஒன்றிய அரசு தலையிட முடியாது. அதுவே சட்டப்படி குற்றம் ஆகும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் அதிகாரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவான அதிகாரங்கள், ஒன்றிய அரசுக்கான அதிகாரங்கள், மாநில அரசுகளுக்கான அதிகாரங்கள் என மூன்று வகையாக உள்ளது.

பொதுப்பட்டியலில் (Concurrent list) 47 அதிகாரங்களும், ஒன்றிய அரசுக்கான பட்டியலில் 97 அதிகாரங்களும், மாநிலப் பட்டியலில் 66 அதிகாரங்களும் உள்ளன. இவை எதிலும் சேர்க்கப்பட்டாத (Residuary powers) சில அதிகாரங்களையும் ஒன்றிய அரசுதான் பயன்படுத்தி வருகிறது. பொதுப் பட்டியலில் உள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசும் - மாநில அரசும் பயன்படுத்தலாம். ஆனால் புதியக் கல்விக் கொள்கை போன்றவை, மாநிலங்களுக்குள் வலுக்கட்டாயமாக திணிக்கப்படுபவை ஆகும். பொதுப்பட்டியல் - ஒத்திசைவுப் பட்டியல் என்று சொன்னாலும், அது ஒன்றிய அரசால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் பட்டியலாகத்தான் உள்ளது.

**மருத்துவர் எழிலன் தொடர்ந்த வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் தாக்கல் செய்த மனுவில், “இந்தியா என்பது பல மாநிலங்கள் அடங்கிய நாடு ஆகும். இங்கு ஒரு மொழி, ஒரு மதம், ஒரு பண்பாடு கொண்ட ஒற்றைச் சட்டங்களை உருவாக்க முடியாது. நாடு முழுவதற்கும் ஒரே கல்விக் கொள்கை என்பதும் பொருத்தமற்றது. கல்வி கடைக்கோடி மனிதனுக்கும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டியது மாநில அரசுகளின் பொறுப்பே ஆகும். எனவே, கூட்டாட்சித் தன்மைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பொதுப் பட்டியலில் கல்வி இனியும் தொடரக்கூடாது. புதிய கல்விக் கொள்கை மூலமாக, மாநில அரசின் உரிமையில் ஒன்றிய அரசு தலையிடுகிறது. மாநிலங்களின் சுயாட்சி உரிமையில் தலையிடுகிறது. மாநில அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையில் ‘நீட்’ தேர்வை மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் தான் கொண்டு வந்தார்கள். கூட்டாட்சிக் கட்டமைப்பைச் சிதைக்கும் செயலை நிறுத்த வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.**

நெருக்கடி நிலையை எதிர்க்கத் தொடங்கி இருக்கும் ஜனநாயகக் காப்பாளர்களான பா.ஜ.க.வினர், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றி தங்களது கொள்கை உறுதியை உலகுக்குக் காட்ட முன்வருவார்களா?



காஞ்சிபுரம் ஏ.கே.ஜி திருமண மண்டபத்தில், நேற்று (18.07.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் நடைபெற்ற “தமிழ்நாடு நாள்” விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் நடைபெற்ற கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை காசோலைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

### அண்ணா – கலைஞர் இணைந்த ஓருருவாய் திகழ்ந்து

# நல்லாட்சி நடத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## காஞ்சிபுரத்தில் நடந்த ‘தமிழ்நாடு விழா’வில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!

*காஞ்சிபுரம், ஜூலை 19-*

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் இணைந்த ஒருருவாய் திகழ்ந்து நல்லாட்சி நடத்தி வருகிறார் என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நடைபெற்ற தமிழ்நாடு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

காஞ்சிபுரம் ஏ.கே.ஜி திருமண மாளிகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் நடைபெற்ற ”தமிழ்நாடு நாள்” விழாவில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் தமிழன்னை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மேலும் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசுகையில் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஆண்டுதோறும் ஜூலை 18 ஆம் நாளினை தமிழ்நாடு நாள் விழாவாக கொண்டாடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். அதனடிப்படையில் கடந்த 2 ஆண்டுகாலமாக இவ்விழா சென்னையில் நடத்தப்பட்டு, 3 ஆம் ஆண்டாக நம்முடைய காஞ்சியில், பேறறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த மண்ணில் நடத்த வேண்டும் என்கின்ற வகையில் முதலமைச்சரின் வழிக்காட்டுதலோடு காஞ்சியில் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாகாணம் என்று இருந்த நம்முடைய மாநிலத்தின் பெயரை மொழிவாரி மாநிலமாக பிரிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா ஒருமனதாக தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றைக்கு (18.7.1967) அறிவித்தது தான் ஜூலை 18 ஆம் நாள். அது வெளிப்படாமல் இருக்கின்றது என்பதை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் எங்களது துறைக்கு உத்தரவிட்டு இன்றைக்கு தமிழ்வளர்ச்சி துறையும், செய்தித் துறையும் இணைந்து இன்றைய தினத்தை தமிழ்நாடு நாள் விழாவாக மூன்றாம் ஆண்டாக கொண்டாடி வருகிறோம்.

தமிழ்நாட்டிற்கென்று பல்வேறு சிறப்புக்களை நாம் பெற்றிருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறுத் திட்டங்களையும், அதே போல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தினார்கள். நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும், மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்கிற வகையில் முதலமைச்சர் பல்வேறுத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இதே மண்ணில் நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் மகளிருக்கான மாத உரிமைத் தொகை ரூ.1,000/- என்னும் திட்டத்தை இங்கு தான் தொடங்கி வைத்தார் என்பது நாம் எல்லோரும் அறிவோம்.

இதுபோல், பல்வேறு திட்டங்கள். அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான கட்டணமில்லா பயணம், அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து கல்லூரிகளுக்குச் செல்லும் உங்களைப் போன்ற மாணவர்களுக்கு, அந்த கல்லூரிகளில் தடையின்றி உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக மகளிருக்கானப் புதுமைப்பெண் திட்டம், இந்த ஆண்டு முதல் நம்முடைய மாணவர்களுக்கும் வழங்குகின்ற வகையில் தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்றத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகின்றார்.

விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும், அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திவருவதால் தான், தமிழ்நாடு மேலும், மேலும் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில், இந்த விழா நடைபெறுவது பேரறிஞர் அண்ணா பிறந்த மண் ஆகும். பேரறிஞர் அண்ணா தனது பேச்சால், எழுத்தால் இந்த தமிழ்நாட்டின் சூழலையே மாற்றிக்காட்டியவர் ஆவார். அவர்களின் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதே போல், இருவரையும் சேர்ந்து, ஒரே உருவமாக விளங்கும் முதலமைச்சர் அவர்களும் நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார். அந்த ஆட்சிக்கு நீங்கள் அனைவரும் தொடர்ந்து உறுதுணையாக இருக்க வேண்டும்.

இங்கு சிறப்பான கருத்தரங்கம் நடக்கிறது. வந்திருக்கும் அனைவரும் முக்கியமாக, மாணவச் செல்வங்கள் இந்த கருத்தரங்கத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகளை கேட்டறிந்து, தெளிவு பெற வேண்டும். நீங்கள் எல்லோரும் தான் தமிழ்நாட்டின் எதிர்காலம். இந்நேரத்தில், உங்கள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்று, வருகைத் தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி, வாழ்க தமிழ்நாடு என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

**காசோலை – பாராட்டு சான்றிதழ்**

குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் ஆகியோர் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் கோ.தீபஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.50,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், இரண்டாம் பரிசு பெற்ற திருவள்ளூர் மாவட்டம் ம. ஜெயஜனனி என்ற மாணவிக்கு ரூ.30,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டம் மு.வீரமணிகண்டன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற திருவாரூர் மாவட்டம் ச. கௌ.பாவேஷ் பிரசன்னா என்ற மாணவனுக்கு ரூ.50,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், இரண்டாம் பரிசு பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டம் அ.அப்துல் ஹக்கீம் என்ற மாணவனுக்கு ரூ.30,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், மூன்றாம் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் நா.ரிஸ்வானா பர்வின் என்ற மாணவிக்கு ரூ.20,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும் வழங்கினார்கள்.

இவ்விழாவினையொட்டி ஆழி.செந்தில்நாதன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் “தமிழ்நாடு வாழ்வும் வரலாறும்” என்ற தலைப்பில் முனைவர் பர்வீன் சுல்தானா அவர்களும், “சென்னை மாகாணமும் செயற்கரிய போராட்டங்களும்” என்ற தலைப்பில் செல்வன் சிவ. சதீஷ் அவர்களும், “சென்னை மீட்பும் வரலாறும்” என்ற தலைப்பில் திருமதி. அனு கிரகா அவர்களும், “திராவிட இயக்கத் தலைவர்களும் நவீன தமிழ்நாடும்” என்ற தலைப்பில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், “தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்ட வரலாறு” என்ற தலைப்பில் செல்வன் மா.மதன் குமார் அவர்களும் கருத்துரையாற்றினார்கள்.

இவ்விழாவில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் இயக்குநர் திருமதி க.பவானி உள்பட அரசு அலுவலர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

### நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

# பேராயர் எஸ்றா சற்குணம் 86-வது பிறந்த நாள் விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வாழ்த்து!

*சென்னை, ஜூலை 19 -*

பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் 86-வது பிறந்த நாள் விழா மற்றும் இந்திய சமூக நீதி இயக்கம் 26-வது ஆண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (19.7.2024-வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு சென்னை, கீழ்ப்பாக்கம் - சென்னை இறையியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றது.

இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களை வாழ்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இவ்விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., சிறுபான்மை ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர்மொகிதீன், அமைச்சர் மனோ தங்கராஜ், மேயர் பிரியா மற்றும் பலர் கலந்து கொண்டு பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களை வாழ்த்துகின்றனர்.




சென்னை, எழும்பூர், ஹோட்டல் அம்பாசிட்டர் பல்லவா–வில் நடைபெற்ற தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) 43வது நிறுவன தினக் கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று (18.07.2024) கலந்து கொண்டு சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு பாராட்டு கேடயங்களை வழங்கினார். உடன் நபார்டு வங்கி, தமிழ்நாடு மண்டல அலுவலகத்தின் முதன்மை பொது மேலாளர் ஆர்.ஆனந்த், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன் உட்பட நபார்டு வங்கி உயர் அலுவலர்கள் உள்ளனர்.